©
GOVERNMENT OF TAMIL NADU
2025

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 4.00 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 640A] சென்னை, புதன்கிழமை, அக்டோபர் 15, 2025
புரட்டாசி 29, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு-2056

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**பொருளடக்கம்**

பக்கங்கள்

**சட்டமுன்வடிவுகள்:**

எண். 27/2025—தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டம் .. .. .. .. .. 2–4

எண். 28/2025—தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம் .. .. .. .. 5–9

**2025–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 27/2025

## 1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்திய குடியரசின் எழுபத்தி ஆறாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.**

1. (1) இந்தச் சட்டம், 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**12–B பிரிவிற்கான திருத்தம்.**

2. 1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் 12–B பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், ''முப்பதாயிரம் ரூபாய்'' எனும் சொற்றொடருக்காக, ''முப்பத்தைந்தாயிரம் ரூபாய்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**தமிழ்நாடு சட்டம் XX/1951.**

**நோக்கக் காரண விளக்கவுரை**

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26 ஆம் தேதியன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மற்றவற்றுக்கிடையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சட்டமன்றப் பேரவை அல்லது சட்டமன்ற மேலவையின் முன்னாள் உறுப்பினர்களுக்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையானது ரூ.30,000/–லிருந்து (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) ரூ.35,000/– (ரூபாய் முப்பத்தைந்தாயிரம் மட்டும்) ஆக, 2025ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1ஆம் தேதியிலிருந்து உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

2. மேற்சொன்ன அறிவிப்பிற்கு செயல் வடிவம் கொடுக்கும் வகையில், அரசானது, 1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் XX/1951) தக்கவாறு திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவானது மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**மு.க.ஸ்டாலின்,**
*முதலமைச்சர்.*

## நிதி பற்றிய குறிப்பு

இந்தச் சட்ட முன்வடிவானது, சட்டமாக இயற்றப்பட்டு செயற்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் போது, மாநில அரசின் தொகுப்பு நிதியத்திலிருந்து செலவு செய்ய நேரிடும். முன்மொழியப்பட்ட சட்டத்தின் விளைவாக செய்ய நேரிடும் கூடுதல் செலவினமானது தோராயமாக, ஆண்டிற்கு ரூ.6,23,40,000/– (ரூபாய் ஆறு கோடியே இருபத்தி மூன்று இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) ஆகும்.

**மு.க.ஸ்டாலின்,**
*முதலமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2025 அக்டோபர் 15.

கி. சீனிவாசன்,
*முதன்மைச் செயலாளர்.*

**2025–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 28/2025**

## 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகச் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்திய குடியரசின் எழுபத்து ஆறாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**1.** (1) இந்தச் சட்டம், 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். **குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.**

(2) இது, மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறித்துரைக்கலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 14/2019. **2.** 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின், (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படும்) நெடுந்தலைப்பில் ''பசுமை பன்முக புலங்கள் அடங்கிய பல்கலைக்கழகங்கள்'' எனும் சொற்றொடருக்குப் பின்பு, ''மற்றும் பழுப்பு பன்முக புலங்கள் அடங்கிய பல்கலைக்கழகங்கள்'' எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும். நெடுந்தலைப் பிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவில்,– 2 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (b) கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''(bb) ''உதவிபெறும் நிறுவனம்'' என்பது 1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டத்தின், (குடியரசுத்தலைவரின் சட்டம் 19/1976) 10 ஆம் பிரிவின்கீழ் அரசிடமிருந்து மானியம் பெறும் ஒரு கல்வி நிறுவனம் என்று பொருள்படும்;'';

(2) (c) கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''(cc) ''பழுப்பு பன்முக புலங்கள் அடங்கிய பல்கலைக்கழகங்கள்'' என்பது தற்போதுள்ள தனியார் கல்லூரி எதனையும் மாற்றுவதன் மூலம் இச்சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு பல்கலைக்கழகம் என்று பொருள்படும்;'';

(3) (q) கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''(qq) ''சிறுபான்மையினர் தனியார் பல்கலைக்கழகம்'' என்பது அரசமைப்பின் 30 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறின் கீழ் அவ்வாறு செய்வதற்கு உரிமையளிக்கப்பட்டவாறான, மதம் அல்லது மொழியின் அடிப்படையில் சிறுபான்மையினர் எவராலும் நிறுவப்பட்டு நிறுவகிக்கப்படுகின்ற ஒரு தனியார் பல்கலைக்கழகம் என்று பொருள்படும்;'';

(4) (v) கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''(vv) ''தனியார் கல்லூரி'' என்பது 1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டத்தின், (குடியரசுத்தலைவரின் சட்டம் 19/1976) 2 ஆம் பிரிவின் (8) ஆம் கூறில் வரையறுக்கப்பட்டவாறு அதே பொருளை கொண்டிருத்தல் வேண்டும்;''.

3 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

4. முதன்மைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில் ''ஒரு பசுமை பன்முக புலங்கள் அடங்கிய பல்கலைக்கழகம்'' எனும் சொற்றொடருக்காக, ''ஒரு பசுமை பன்முக புலங்கள் அடங்கிய பல்கலைக்கழகம் அல்லது ஒரு பழுப்பு பன்முக புலங்கள் அடங்கிய பல்கலைக்கழகம்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

4 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

5. முதன்மைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவில், (a) கூறுக்காக பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''(a) தனியார் பல்கலைக்கழகத்திற்காக குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒதுக்கிவைக்கப்பட்ட,

(i) அத்தகைய நிலமானது மாநகராட்சி பரப்பிடத்திற்குள் இருந்தால், இருபத்தைந்து ஏக்கருக்கு குறையாமலோ; அல்லது

(ii) அத்தகைய நிலமானது நகராட்சி மன்றம் அல்லது பேரூராட்சி பரப்பிடத்திற்குள் இருந்தால் முப்பத்தைந்து ஏக்கருக்கு குறையாமலோ; அல்லது

(iii) அத்தகைய நிலமானது (i) மற்றும் (ii) ஆம் இனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பரப்பிட வகைகளைத் தவிர பிற பரப்பிடத்திற்குள் இருந்தால் ஐம்பது ஏக்கருக்கு குறையாமலோ, தொடர்ச்சியான நிலத்தை வைத்திருக்க வேண்டும்.

விளக்கம்.— ஒரு தனியார் பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு குறித்தொதுக்கப்பட்ட தொடர்ச்சியான நிலம், மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒன்றுக்கும் மேற்பட்ட வகைப் பரப்பிடத்தில் பரவியிருந்தால், நிலத்தின் குறைந்தபட்ச தேவையானது, கூறப்பட்ட நிலத்தின் கணிசமான பகுதிக்குள்ளான வகைப்பாட்டினைப் பொருத்தது ஆகும்.

6 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

6. முதன்மைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவில், (e) கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

''(ee) நேர்விற்கேற்ப, ஏற்கனவே உரிமையுடைய அல்லது உரிமையுடையதாக அல்லது உருவாக்கப்பட முன்மொழியப்பட்ட நிலம், கட்டடம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிவாய்ப்பு ஆகியவற்றின் விவரங்கள்;''.

14–A எனும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.

7. முதன்மைச் சட்டத்தின் 14 ஆம் பிரிவிற்குப் பின்பு பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

**''14–A. மருத்துவம், பல்மருத்துவம், மருத்துவம் சார்ந்த துணைப் பாடப்பிரிவுகள் மற்றும் இந்திய மருத்துவ பாடப்பிரிவுகளின் அரசு இடங்களை குறித்தொதுக்குதல்.—** (1) தனியார் பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றும்,—

(i) அது சிறுபான்மையினரல்லாத தனியார் பல்கலைக்கழகமாக இருப்பின், 65 விழுக்காடு இருக்கைகள்; மற்றும்

(ii) அது சிறுபான்மையினர் தனியார் பல்கலைக்கழகமாக இருப்பின் 50 விழுக்காடு இருக்கைகளை,

மருத்துவம், பல்மருத்துவம், மருத்துவம் சார்ந்த துணைப் பாடப்பிரிவுகள் மற்றும் இந்திய மருத்துவ பாடப்பிரிவுகளின் ஒவ்வொரு பிரிவுகளிலும் அரசு இருக்கைகளாக, குறித்தொதுக்குதல் வேண்டும்.

விளக்கம்.— இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக, மருத்துவம், பல்மருத்துவம், மருத்துவம் சார்ந்த துணைப் பாடப்பிரிவுகள் மற்றும் இந்திய மருத்துவ பாடப்பிரிவுகள் என்பது,—

(i) இளநிலை மருத்துவம் மற்றும் அறுவைச் சிகிச்சை; மற்றும்

(ii) இளநிலை பல்மருத்துவத்தின், முதலாமாண்டு என்று பொருள்படும்;

மற்றும் இதன் பொருட்டு அரசால் அறிவிக்கப்படலாகும் இளநிலை மற்றும் முதுநிலை படிநிலையிலான வேறு பிற பாடப்பிரிவுகளையும் உள்ளடக்கும்.

(2) ஒவ்வொரு தனியார் பல்கலைக்கழகத்திலுள்ள அத்தகைய குறித்தொதுக்கப்பட்ட அரசு இடங்களுக்கான சேர்க்கையானது, நடைமுறையில் உள்ள சட்டத்தின் படியான இடஒதுக்கீடு விதிகளைப் பின்பற்றி செய்யப்படுதல் வேண்டும்.''.

8. முதன்மைச் சட்டத்தின் 37 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவுக்குப் பின்பு பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– 37 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

''(1–A) ஓர் உதவிபெறும் நிறுவனம், ஒரு பழுப்பு பன்முக பல்கலைக்கழகமாக மாறும் நேர்வில், அத்தகைய நிறுவனத்தில் அரசு அனுமதிக்கப்பட்ட பதவிகளில் பணியமர்த்தப்பட்ட நபர்களின் பணி நிபந்தனைகளானது, அத்தகைய மாற்றம் அவர்களுக்கு இல்லாதிருந்தால், அவர்களுக்குப் பொருந்தக்கூடிய நிபந்தனைகளை விட எந்த வகையிலும் குறைந்த சாதகமாக இருத்தல் கூடாது.

வரம்புரையாக, இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், அத்தகைய பணியாளர் எவரும், இந்த உட்பிரிவின் கீழ் உரிமை உள்ளவர்களை விட, அவருக்கு அதிக சாதகமாக உடைய பொருட்பாடு எதனையும் பொருத்து, அவருக்கு உரிமை அல்லது சிறப்புரிமை வழங்குவதற்காக, ஓர் ஒப்பந்தத்தில் ஈடுபடுவதிலிருந்து தடுத்தல் ஆகாது என்று பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

9. முதன்மைச் சட்டத்தின் 55 ஆம் பிரிவுக்குப் பின்பு பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது,– 55–A எனும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.

''**55–A. மாணவர்களின் படிப்பை நிறைவுசெய்தல்.–** இந்தச் சட்டத்தில் அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகளில் என்ன அடங்கியிருந்தபோதிலும், எந்தவொரு பல்கலைக்கழகத்துடனும் இணைக்கப்பட்ட தனியார் கல்லூரி மாணவர் எவரும், அந்த தனியார் கல்லூரி பழுப்பு பன்முக புலங்கள் அடங்கிய பல்கலைக்கழகமாக மாற்றப்படுவதற்கு உடனடி முன்னர் படித்துக்கொண்டிருந்தாலோ அல்லது அந்தப் பல்கலைக்கழகத்தின் தேர்வு எதனையும் எழுதத் தகுதி பெற்றிருந்தாலோ, அந்தப் பல்கலைக்கழகத்தில் தனது படிப்பை முடிக்க அவர் அனுமதிக்கப்படுதல் வேண்டும். மேலும் பழுப்பு பன்முக புலங்கள் அடங்கிய பல்கலைக்கழகமானது, தொடர்புடைய பல்கலைக்கழகத்தின் பாடப்பிரிவிற்கு இணங்க, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலஅளவிற்கும் அத்தகைய முறையிலும், மாணவர்களுக்கு பயிற்றுவித்தல், கற்பித்தல் மற்றும் பயிற்சிகளுக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும் மற்றும் அத்தகைய மாணவர்கள், அத்தகைய காலஅளவின் போது, தொடர்புடைய பல்கலைக்கழகத்தால் வைக்கப்படும் அல்லது நடத்தப்படும் தேர்வுகளுக்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய தேர்வுகளின் முடிவுகளின் பேரில் தகுதிபெற்ற மாணவர்களுக்கு தொடர்புடைய பல்கலைக்கழகத்தின் தொடர்புடைய பட்டம், பட்டயம் அல்லது பிற கல்விச்சிறப்புகள் ஆகியன தொடர்புடைய பல்கலைக்கழகத்தால் அளிக்கப்படுதல் வேண்டும்.''.

## நோக்கக் காரண விளக்கவுரை

2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டமானது, (தமிழ்நாடு சட்டம் 14/2019) தற்போதுள்ள கல்வி நிறுவனங்களைக் கருத்தில் கொள்ளாமல் புதிதாக ஒரு தனியார் பல்கலைக்கழகத்தை நிறுவ செய்கிறது. சமீப காலமாக, மாநிலத்தில் உள்ள தனியார் கல்லூரிகளானவை கற்பித்தல், ஆராய்ச்சி, தேர்வு மற்றும் விரிவாக்க பணிகளுக்குப் போதுமான வசதிகளைக் கொண்ட, கல்வியில் மேம்பட்ட ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கும், உலகளாவிய பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தற்காலப் பாடப் பிரிவுகளைத் தொடங்குவதற்கும் தனியார் பல்கலைக்கழகங்களைத் தொடங்குவதில் ஆர்வம் காட்டி வருகின்றன.

2. மேற்கூறப்பட்ட சட்டத்தின் 4 ஆம் பிரிவின்படி, தமிழ்நாட்டில் தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்காக 100 ஏக்கர் தொடர்ச்சியான நிலம் தேவைப்படுகிறது. மாநகராட்சிப் பகுதிகள், நகராட்சி மன்றம் மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் செயல்படும் கல்வி நிறுவனங்கள், அந்தப் பகுதிகளில் அத்தகைய மிகப்பெரிய அளவிலான தொடர்ச்சியான நிலத்தை அடையாளம் காண்பது மிகவும் கடினமாக உள்ளது. பிற அண்டை மாநிலங்களின் தனியார் பல்கலைக்கழகங்களின் சட்டங்களுக்கு இணங்க நிலத்தின் தேவை குறைக்கப்பட்டால், தகுதியான மற்றும் உரிய கல்வி நிறுவனங்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படலாம். எனவே, மாணவர் சமூகத்தின் நலனுக்காகவும், உயர் கல்வியை மேம்படுத்தவும், மாநிலத்தில் தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கான கொள்கை நெறிகளை எளிமைப்படுத்தவும், மேற்கூறிய நோக்கத்திற்காக, மேற்கூறிய சட்டத்தைத் திருத்தம் செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவு, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**முனைவர் கோவி. செழியன்,**
*உயர்கல்வித் துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு**

இந்தச் சட்டமுன்வடிவின் 1(2), 7 மற்றும் 9 ஆம் கூறுகளில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை மேற்கொள்வதற்காக, நேர்விற்கேற்ப, அறிவிக்கைகளை வெளியிடுவதற்கு அல்லது விதிகளைச் செய்வதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**முனைவர் கோவி. செழியன்,**
*உயர்கல்வித் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2025 அக்டோபர் 15.

கி. சீனிவாசன்,
*முதன்மைச் செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.